# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் ஜுன் திங்கள் 30–ம் நாள் திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

31.12.2007. 29.02.2008, 31.03.2008 மற்றும் 29.05.2008–ம் தேதிகளில் நடைபெற்ற அவசரக்கூட்டங்கள் மற்றும் சாதாரணக்கூட்டங்களில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள்.

மாநில நிதிக்குழு சமன்பாட்டு நிதி (சுனாமி) சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் குளச்சல் துாய மரியன்னை மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தை குளச்சல் நகராட்சியின் சொத்தாக ஏற்றெடுப்பது தொடர்பாக ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், குருந்தன்கோடு அவர்களிடமிருந்து கடிதம் (எண். அ2/5837/05 நாள் 15.10.2007) வரப்பெற்றுள்ளது. மேற்காண் சமுதாய நலக் கூடத்தினை நகராட்சியின் சொத்தாக எடுத்துக் கொள்வது தொடர்பாக மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 573** மாநில சமன்பாடு நிதியிலிருந்து ரூ.25 லட்சம் செலவில் ஒரு சமுதாயக் கூடத்தினை குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம், குளச்சல் நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள புனித மேரி மேனிலைப்பள்ளி வளாகத்தில் 15 சென்ட் நிலத்தில் கட்டி முடித்துள்ளது. குளச்சல் நகராட்சி மேற்படி சமுதாய நலக்கூடத்தினை ஏற்றெடுக்க வேண்டுமென்று குளச்சல் நகராட்சி நிர்வாகத்தினை, குருந்தன்போடு ஊராட்சி ஒன்றிய ஆணையர் வலியுறுத்தி வருகிறார். குளச்சல் புனித மேரி மேனிலைப்பள்ளி நிர்வாகம் குளச்சல் காணிக்கை அன்னை ஆலய பங்கு நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகின்றது. 2004 டிசம்பர் திங்கள் 26–ாம் நாளைய சுனாமி பேரழிவில் பாதிக்கப்பட்டுள்ள குளச்சல் மீனவர்களின் நலனுக்காகவும், அவர்களுடைய முழுமையான பயன்பாட்டிற்காகவும் மட்டும்தான் மேற்படி சமுதாய நலக்கூடம் அமைக்கப்படுகிறது என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில்தான் ரூ. 75 லட்சம் பெறுமானமுள்ள 15 சென்ட் நிலத்தினை மேற்படி சமுதாய நலக்கூடம் அமைப்பதற்கு ஒப்படைப்பு செய்துள்ளதாகவும், எனவே மேற்படி சமுதாயநலக் கூடத்தினை வாக்குறுதிப்படி தங்களிடமே ஒப்படைப்பு செய்திட வேண்டும் என்றும் கேட்டு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய கடித நகல் நகராட்சி ஆணையருக்கும், நகர்மன்றத் தலைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஆட்சியரின் தெளிவினை இவ்விஷயத்தில் கேட்டுப் பெற்றிட மன்றம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. ஆரியங்காவு | துப்புரவு ஆய்வாளர் | 3/2008<br>4/2008 | 440/–<br>1024/– |
| 2 | திரு. எஸ்.ஜே. இராஜகுமார் | இளநிலை உதவியாளர் | 3/2008<br>4/2008 | 278/–<br>278/– |
| 3 | திருமதி.எஸ். சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 4/2008 | 526/– |
| 4 | திருமதி. நுார்ஜகான் | இளநிலை உதவியாளர் | 3/2008<br>4/2008 | 1285–<br>1140/– |
| 5 | செல்வி.க. சாந்தி | வருவாய் உதவியாளர் | 2/2008<br>3/2008<br>4/2008 | 131/–<br>262/–<br>262/– |
| 6 | திருமதி. சகாயரூபி | வருவாய் உதவியாளர் | 4/2008 | 238/– |
| 7 | திரு. தமிழ் செல்வன் | வருவாய் உதவியாளர் | 4/2008 | 238/– |
| 8 | திருமதி. க. பிரேமா | சமுதாய அமைப்பாளர் | 3/2008<br>4/2008 | 81/–<br>932/– |
| 9 | திருமதி. மீனாம்பாள் | மகப்பேறு ஆயா | 3/2008<br>4/2008 | 208/–<br>364/– |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 574 :** அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 2**

இந்நகராட்சிக்குட்பட்ட களிமார் பகுதியில் கதவு எண்கள் 17/19, 17–19/1, 17–19/2 ஆகிய கட்டிடங்கள் செயின்ட் ஆன்ஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியின் பள்ளிக்கட்டிடங்களாக செயல்பட்டு வருகிறது. மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 83 C –ன்படி கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்துள்ளது. எனவே மேற்படி கதவு எண்களுக்கு விதிக்கப்பட்ட சொத்துவரியினை வரிவிலக்கு அளிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அலுவலக கட்டிடத்தினை தவிர பிற சேவை மனப்பான்மையுடன் நடத்தும் கல்வி நிலைய கட்டிடங்களுக்கு வரி விலக்களிக்கலாம்.

**தீர்மானம் எண். 575 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாங்கரை பகுதியில் கதவு எண்கள் 2/19, 2/19B ஆகிய கட்டிடங்கள் ஜோசப் மெட்ரிக்குலேசன் பள்ளியின் பள்ளிக்கட்டிடமாகவும், ஆய்வுக்கூடமாகவும் செயல்பட்டு வருகிறது. மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 83 C –ன்படி கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்துள்ளது. எனவே மேற்படி கதவு எண்களுக்கு விதிக்கப்பட்ட சொத்துவரியினை வரிவிலக்கு அளிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அலுவலக கட்டிடத்தினைத் தவிர பிற சேவை மனப்பான்மையுடன் நடத்தும் கல்வி நிலைய கட்டிடங்களுக்கு வரி விலக்களிக்கலாம்.

**தீர்மானம் எண். 576 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சியிலிருந்து கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2008–2009–ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகை ரூ. 4000/–ம் செலுத்த வேண்டும். என திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 8429/07/சி2 நாள் 23.05.2008–ல் தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி பங்குத் தொகையை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 577 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

குளச்சல் நகராட்சி கதவு எண். 26/85 எண் கொண்ட கட்டிடத்தில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பு நிரந்தரமாக துண்டிப்பு செய்யப்பட்டு மன்ற தீர்மானம் எண். 510 நாள் 31.03.2008 –ன்படி குடிநீர் இணைப்பு ரத்து செய்யப்பட்டது. மனுதாரர் நிலுவையில் இருந்த வரிபாக்கி தொகை முழுவதையும் செலுத்தி உள்ளார். தற்போது மனுதாரர் துண்டிப்பு செய்யப்பட்ட இணைப்பை மீண்டும் வழங்க கோரி விண்ணப்பித்து உள்ளார். எனவே மீண்டும் இணைப்பு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 578 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

குளச்சல் நகராட்சி – குடிநீர் கட்டண வசூலினை முறைப்படுத்தும் விதமாக அபராதக் கட்டணம் வசூலிக்கவிருப்பதை பொதுமக்களுக்கு தெரியப்படுத்த அறிவிப்புகள் உள்ளூர் அச்சகங்கள் மூலம் அச்சடிக்க 09.05.2008 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | செல்வி பிறஸ் & ஆப்செட், குளச்சல் | – 5000 எண்ணம் நோட்டீஸ் அச்சடிக்க. | – | ரூ. 2250/– |
| 2) | டயானா ஆப்செட், குளச்சல் | “ | – | ரூ. 2300/– |
| 3) | றீகன் பிறஸ் & ஆப்செட், குளச்சல் | “ | – | ரூ. 2400/– |

இதில் M/s. செல்வி பிறஸ் & ஆப்செட், குளச்சல் என்பவர் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதையும், குறைந்த விலைப்புள்ளி கொடுத்த M/s. செல்வி பிறஸ் & ஆப்செட், குளச்சல் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 579 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். TN-74 V 3530 –ல் கீழ்க்கண்ட விபரப்படியான பழுதுகளை உடனடியாக சரிசெய்ய வேண்டியுள்ளது.

1) மின்கலம் மாற்றுதல்
2) இன்ஜின் ஆயில் மாற்றுதல்
3) டீசல் பில்டர், ஆயில் பில்டர் மாற்றுதல்
4) வீல் அலெயின்மென்ட், வீல் பேலன்சிங் பார்த்தல்
5) சர்வீஸ் மற்றும் கிரீஸ் அடித்தல்
6) கீயர் பாக்ஸ் கிரௌன் ஆயில் மாற்றுதல்

மேற்கண்ட பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.10,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** 1) செலவினம் ரூ.10,000/–க்கு ஒப்புதல் வழங்கலாம்.
2) அவசர அவசியத்தின்பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 25.06.2008–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 580 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

அரசாணை (நிலை) எண்.61 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள் 11.04.2008–ல் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் மற்றும் பொறுப்புகள் வழங்குவது – விதிமுறைகளை கடைபிடிக்க அறிவுறுத்தல் – சம்மந்தமாக வெளியிடப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 581 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 20040/2008/டிபி3 நாள் 10.06.2008–ல் மாவட்ட அளவில் ஒவ்வொரு வாரமும் வெளியிடப்படும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி மலருக்கு ஆண்டு சந்தா ரூ. 600/– செலுத்த கோரப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட தொகையினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாகர்கோவில் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 582 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வி.கே.பி.பள்ளிக்கூடத்திற்கும், அண்ணாசிலைக்கும் இடைப்பட்ட மெயின்ரோட்டில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் நிறைந்து கழிவுநீர் சாலையில் வழிந்து பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு விளைவித்து வந்த கழிவுநீரை குழித்துறை நகராட்சி கழிவுநீர் உறிஞ்சும் லாறியை கொண்டு வந்து 3 லோடு கழிவுநீர் அகற்றப்பட்டதற்கான கட்டணம் ரூ. 11,000/–யை குழித்துறை நகராட்சிக்கு வழங்குவதற்கு இவ்வலுவலகத்தில் 30.01.2008–ம் தேதி நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் இப்பொருள் குறித்து பொருள் வைக்கப்பட்ட போது தீர்மானம் எண். 450, நாள் 30.01.2008–ல் மேற்படி கட்டணத் தொகையினை இயன்ற வரைக்கும் குறைவு செய்து தருமாறு குழித்துறை நகராட்சியை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. அதன்பேரில் குழித்துறை நகராட்சிக்கு மேற்படி தொகையை குறைவு செய்து தரக்கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி பொருள் குறித்து குழித்துறை நகராட்சி நகர்மன்ற கூட்டத்தில் வாடகைத் தொகையினை குறைவு செய்ய இயலாது என்று நகர்மன்றத் தீர்மானம் எண். 1496 நாள் 29.04.2008–ன் மூலம் தீர்மானிக்கப்பட்டதாக 14.05.2008–ல் இவ்வலுவலகத்திற்கு கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** பொதுமக்கள் நலன் கருதி அவசர அவசியத்தை முன்னிட்டு கழிவுநீர் வாய்க்காலிலிருந்து குழித்துறை நகராட்சி கழிவுநீர் உறிஞ்சும் லாறியை கொண்டு கழிவுநீரை மாற்றியதற்கும், அதற்கான கட்டணத் தொகையை நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று வழங்கியதையும் மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண். 583 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாறி T.N. 74 Z 8931, T.N.74 5507–க்கு இன்சூரன்ஸ் தொகை ரூ. 15,192/– யை ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு வழங்கியதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டடப்படுகிறது.

**அ.குறிப்பு:** இந்நகராட்சி மினி லாரிக்குரிய இன்சூரன்ஸ் தொகையை அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 584 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 12**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை எண். (நிலை) எண். 110 நாள் 23.06.2008–ல் கீழ்காணும் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு :

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மக்களுக்கான குடிநீர், வடிகால், சாலை போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கென பெரும் செலவில் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வரும் இவ்வேளையில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருவாயை உயர்த்தி அமைக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளன. சொந்த வருவாயின் முக்கிய கூறான சொத்துவரியின் மூலமான வருவாயை பொது சீராய்வின் மூலமாக பெருக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே வேளையில் குடியிருப்புகள் உள்ளிட்ட சொத்துக்களின் உரிமையாளார்கள் சிரமத்திற்குள்ளாகலாம். என்பதை கருத்தில் கொண்டு, சொத்துவரி உயர்வு தற்போதுள்ள அரையாண்டு சொத்துவரியில் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25 சதவீதத்திற்கு மிகாமலும், தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும், வணிக கட்டிடங்களுக்கு 150 சதவீதத்திற்கு மிகாமலும், அமைந்திருக்கலாம் என வழிகாட்டுதல் நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உயர்வு சதவீதத்தை அந்தந்த நகர்புற உள்ளாட்சி மன்றமே அதன் வருவாய் மற்றும் செலவினங்களை கருத்தில் கொண்டு அரசு நிர்ணயித்துள்ள உயர்ந்த சதவீததிற்குள் இருக்கும்படியாக தீர்மானித்துக் கொள்ளலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 585 : கீழ் குறிப்பிட்டவாறு சொத்துவரி உயர்வு செய்திட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது:**

1. **குடியிருப்புகளுக்கு : 12.5 சதவீதம்** (12.5%)
2. **தொழிற்சாலை கட்டிடங்கள் : 50 சதவீதம்** (50%)
3. **வணிகக் கட்டிடங்கள் : 50 சதவீதம்** (50%)

**அரசாணை எண்.(நிலை)110–நாள்.23.06.08ன்படி மிகவும் கணிசமானஅளவில் வரி குறைப்பு செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளதால் கட்டிடங்களின் வயதிற்கான தள்ளுபடியினை தள்ளுபடி செய்தும் மன்றம் ஏகமனதாகத் தீர்மானிக்கிறது.**

**பொருள் எண் : 13**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள தீயணைப்பு நிலைய அலுவலக கட்டிடம் மற்றும் காதிபோர்டு ஆகியவற்றின் குத்தகை காலங்கள் முறையே 31.03.2008 மற்றும் 30.06.2008 உடன் முடிவடைந்துள்ளதால் குத்தகை நிபந்தனைகளின்படி மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிக்கவும் கீழ்க்கண்ட விபரப்படி 15 சதவீத வாடகை உயர்வு செய்து நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டடப்படுகிறது.

| வ.எண். | கடை எண். | அலுவலகத்தின் பெயர் | தற்போதைய வாடகை தொகை | 15% உயர்வு செய்யப்பட்ட வாடகை |
|---|---|---|---|---|
| 1 | 8 | தீயணைப்பு நிலைய அலுவலக கட்டிடம் | ரூ. 1119/– | ரூ. 1287/– |
| 2 | 30 | காதி போர்டு | ரூ. 1574/– | ரூ.1810/– |

**அ.குறிப்பு:** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 586 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 14**

குளச்சல் நகராட்சி குடிநீர் பிரிவில் 13 ஆழ்துளை கிணறுகள் மூலம் நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் சீம்பிளிவிளை என்னும் பகுதியில் அமைந்திருக்கும் ஆழ்துளை கிணறு எண். 3 மற்றும் 12 ஆகிய இரண்டு ஆழ்துளை கிணறுகளிலும் உள்ள குடிநீரில் அதிகமாக உப்பு தன்மை காணப்படுகிறது. இது குறித்து பொதுமக்களிடம் இருந்து ஏராளமான புகார்கள் வந்தவண்ணம் உள்ளன. மேலும் நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகள் தெற்கு கள்ளியடைப்பு சாலை மற்றும் பண்டாரவிளை ஆகிய இடங்களில் உள்ளன. அவற்றை சீரமைத்து குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்துமாறு நகராட்சி மன்றத் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி கிணறுகளில் உள்ள குடிநீர், குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுமா என்பதை கண்டறிய Flushing செய்து குடிநீரின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றை அறிவதற்கும். அதற்கான மதிப்பீடு ரூ. 9000/—க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 587 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 15**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான காமராசர் பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாகத்தின் வடக்குப் பகுதியில் உள்ள படிக்கட்டின் ஒரு பகுதி காலியாக உள்ளது. மேற்படி இடத்தினை கடையாக மாற்றுவதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 32,000/—க்கும் நகர்மன்ற தீர்மானம் எண். 570 நாள் 29.05.2008—ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 17.06.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதன்பேரில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1) திரு.பி.தங்கமணி,<br>ஒப்பந்தக்காரர் | . . . | 0.29% மதிப்பீட்டைவிட குறைவு<br>( ரூ. 28,746.50 ) |
| 2) திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்தக்காரர் | . . . | 6.54 % மதிப்பீட்டைவிட அதிகம்.<br>( ரூ. 30,714. 00 ) |

இதில் திரு.பி.தங்கமணி என்பவர் 0.29% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.தங்கமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 588 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 16**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். TN-74 V 3530 மின்கலம் பழுதடைந்து சுமார் ஒரு வாரக் காலமாக இயங்காமல் நிற்கிறது. மேலும் அத்துடன் இன்ஜின் ஆயில் மாற்றுதல், டீசல் பில்டர், கிரீஸ் பேக்அப் செய்தல், வீல் அலைன்மென்ட், கியர் பாக்ஸ் க்ரெளன் ஆயில் மாற்றுதல் போன்ற பணிகளையும் சேர்த்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தினமும் காலை மற்றும் மாலை ஆகிய இரு வேளைகளிலும் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி வாகனத்தின் தேவை மிக இன்றியமையாததாகும். எனவே அவசர அவசியத்தின் பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அ.னுமதி பெற்று 25.06.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1) M/s. S.G.J. ஆட்டோ கேர் (P) Ltd.,<br>மார்த்தாண்டம். | : | ( மதிப்பு விகிதம் )<br>ரூ. 9,975/— |
| 2) கோடை ஆட்டோமொபைல்ஸ்<br>கே.பி.ரோடு, நாகர்கோவில். | : | 2.56% மதிப்பீட்டைவிட அதிகம்<br>ரூ. 10,230/— |

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின்பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.S.G.J. ஆட்டோ கேர் (P) Ltd., மார்த்தாண்டம், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொண்டதையும், பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 589 : அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி